தொழில் நுட்பக் கல்வித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,<br>தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,<br>கிண்டி, சென்னை – 600 025. | முதல்வர்/முதல்வர் (பொ),<br>அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும்<br>சிறப்புப் பயிலகங்கள். |

கடித எண்.13504/பி4/2016, நாள்:26.08.2016.

ஐயா/அம்மையீர்,

பொருள்: நிர்வாகம் – தொழில் நுட்பக் கல்வி – 2017 ஜனவரி முதல் 2017 டிசம்பர் வரை வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களின் விவரம் – கோருதல் – தொடர்பாக.

* * * * *

இத்துறையின் கீழ் இயங்கும் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களில் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறுவோர் பட்டியல் தயார் செய்யும் பொருட்டு தங்கள் பயிலகத்தில் 2017 ஜனவரி முதல் 2017 டிசம்பர் வரை வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற உள்ள ஆசிரியர்களின் விவரங்களை மாத வாரியாக கீழ்க்கண்ட அட்டவணைப்படி அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ.எண். | பெயர் | பதவி மற்றும் பிரிவு | பிறந்த தேதி | ஓய்வு பெறும் தேதி |
| --- | --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) | (5) |

மேற்படி விவரங்களை விடுதல்கள் ஏதுமின்றி அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவதுடன், பணிப்பதிவேட்டின் பதிவுகளின்படி அளிக்கப்பட்ட விவரங்கள் சரியாக உள்ளது என்பதற்கான சான்றினை முதல்வர்கள் அளிக்கும்படியும், மேற்காணும் விவரங்களை 15.09.2016–க்குள் அனுப்பி வைக்கும்படியும், மேலும் அளிக்கப்படும் விவரங்களில் விடுதல்கள்/தவறுகள் இருந்தால் சம்பந்தப்பட்ட பயிலக முதல்வர்களே இதற்கு முழுப்பொறுப்பாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நா. கோபாலம்
26/8/16

தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்காக.

26.8.16